**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 ஜூன் 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்

கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.6.2 இன் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வருடாந்த நிதிக்கூற்றுக்கள்** | | |
| 2023 நவம்பர் 30 திகதிய 05/2023 இலக்கங் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2024 பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை 07 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2024 மார்ச் 06 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி சமர்ப்பிக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| | | |
|---|---|---|
| 2023 நவம்பர் 07 திகதிய 03/2023 இலக்கங் கொண்ட அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் விடய இலக்கம் 30301 ஐ கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று 2024 பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதனை 19 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2024 மார்ச் 18 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி சமர்ப்பிக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என. | அரச கணக்கு வழிகாட்டலின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.2 நிதிக் கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் முன்னைய ஆண்டிற்கான பெறுமதிகள் சித்திரித்துக் காட்டும் போது திருத்தப்பட்ட பெறுமதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று சரிசெய்யப்பட்டது என. | காசுப் பாய்ச்சல் கூற்றின் பெறுமதிகள் சரியாக சித்தரித்துக் காட்டப்பட வேண்டும். |

**1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி செயலாற்றல் கூற்றில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 1,200,000 தொகை காட்டப்பட்டிருக்காததுடன், திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 1,200,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றுகை கூற்று சரிசெய்யப்படும் என. | நிதிச் செயலாற்றல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும் என. |
| (ii) | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் மற்றும் முற்பணங்கள் அறவீடு செய்தல் முறையே ரூபா 1,715,831 தொகை மற்றும் ரூபா | காசுப் பாய்ச்சல் கூற்று சரிசெய்யப்பட்டது என. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1,149,760 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் செயற்பாட்டு தொழிற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 2,865,591 தொகையினால் மிகையாகக் கணிக்கப்பட்டிருந்தது. | | |

(ஆ) மீண்டுவரும் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில் மானியங்கள் மற்றும் மாற்றங்கள் ரூபா 2,865,591 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தமையால் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் அந்தத் தொகையினால் மிகை கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்று சரிசெய்யப்படும் என. | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

(இ) காசு அல்லாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 3 மின்தறிநெசவுத் தொழிற்சாலைகள் அவை அமைந்துள்ள பிரதேச செயலகங்களுக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் அந்தக் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி அகற்றப்பட்டிருக்கவில்லை. | இந்த சொத்துக்களின் பெறுமதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தப்பட்டது என. | நிதியல்லாத சொத்துக்கள் கூற்று சரியாக காட்டப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யடிநுவர மின்தறிநெசவுத் தொழிற்சாலையில் இருந்து 2000-2012 காலப் | சிறு மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகள் அபிவிருத்தி | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிக்குரிய நிலுவை குத்தகைத் தொகையில் ரூபா 556,000 தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | பிரிவின் அங்கீகாரத்தின் படி 2023 நவம்பர் 09 திகதியில் உள்ளவாறு நிலுவைத் தொகையாகிய ரூபா 2,156,000 இற்கான தொகை அத் திகதி முதல் 12 தவணைகளில் அறவீடு செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 30 திகதியளவில் ரூபா 1,600,000 இற்கான தொகையொன்று அறவீடு செய்யப்பட்டது என. | |
| (ஆ) | தலல்ல மற்றும் ஹிங்குரங்கொட மின்தறி நெசவுத் தொழிற்சாலையிற்கான காணி மற்றும் கட்டிடங்கள் குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக முறையே 1995 ஆண்டு முதல் 2000 ஆண்டு வரை மற்றும் 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 9,431,000 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | தலல்ல மின்தறி நெசவுத் தொழிற்சாலைக்குரிய காணியின் நிலுவை வாடகைத் தொகை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய இறுதி விசாரணை கடிதம் 2024 பெப்ரவரி 22 திகதி அனுப்பப்பட்டுள்ளது என.<br><br>ஹிங்குரங்கொட மின்தறி நெசவுத் தொழிற்சாலை காணி மற்றும் கட்டிடங்கள் மீதான நிலுவை குத்தகைத் தொகை அறவீடு செய்வது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை மீள அழைக்கப்பட்டிருந்ததுடன் நிலுவைத் தொகை 2023 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் செலுத்தி முடிக்கும் வரை குத்தகையாளர்களுக்கு 2023 திசெம்பர் 09 திகதி மீண்டும் அறிவிக்கப்பட்டது என. | நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பிபில மின்தறி நெசவுத் தொழிற்சாலை கட்டிடம் குத்தகை அடிப்படையில் வழங்கள் தொடர்பாக அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 1,681,250 தொகையின் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக மேல் மாகாண மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நிலுவை வாடகைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆறு மாதகால பாடநெறி ஒன்றிற்காக கடுபெத்த பயிற்சி நிறுவனத்திற்கு மாத்திரம் இரண்டு மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் மாணவர்கள் பதிவு செய்திருக்காமையால் ஏனைய 13 பயிற்சி நிறுவனங்களிலும் இந்தப் பாடநெறி நடாத்துவதற்கு முடியாமல் இருந்தது. | திணைக்களத்திற்கு சொந்தமான பயிற்சி நிறுவனங்களின் பௌதீக இட வசதியின் படி ஒரு நிறுவனத்திற்கு மாணவர்களின் உச்ச அளவு சுமார் 15 பேருக்கு பயிற்சி வழங்கக் கூடியதாக இருந்த போதிலும், பயிற்சி பாடநெறிகளுக்காக மாணவர்களின் விண்ணப்பித்தல் படிப்படியாக குறைவடைதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என. | கூடிய எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இறுதி சான்றிதழ் பாடநெறிக்காக கட்டுபெத்த பயிற்சி நிறுவனத்திற்கு 19 மாணவர்களும், ஏனைய 13 பயிற்சி நிறுவனங்களுக்கும் 05 மாணவர்கள் முதல் 09 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையொன்றாக மொத்தம் 91 பேர் பதிவு செய்யப்பட்டிருந்தது. | | |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 02 சுற்றுலா விடுதிகள் என்பவற்றை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான 03 பயிற்சி நிறுவனங்களின் காணிகள் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பயிற்சி நிறுவனங்களின் காணிகளை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சொத்துக்களின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உரிமையை அறுதியாக இனங்கண்டிருக்காத, காவற்குடில் ஒன்று மற்றும் 02 கட்டிடங்களை கொண்ட 30 பர்சஸ் காணியாகிய இராஜகிரியவில் அமைந்துள்ள இயற்கை நிறந்தீட்டும் நிலையம் 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | திணைக்களத்தின் தேவைப்பாட்டின் படி சட்டரீதியான சாட்டுதல் ஒன்றுடன் பயன்படுத்தப்பட்டு வந்த இந்த கட்டிடம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணி ஒன்று என உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்களை ஆக்கபூர்வமான பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 2020 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 19,991,000 தொகை பெறுமதியான 185 கைத்தறி தொகுதிகள் மற்றும் 146 பயின்டிங் இயந்திரங்கள் 3 வருடங்களாக கடுபெத்த களஞ்சிய வளாகத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | 2020 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நெசவுக் கைத்தொழில் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 19,991,000.00 பெறுமதியான இந்த இயந்திர இருப்பு, தகைமையுடைய நலன்பெறுவேருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக திணைக்களம் கண்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை. | 2024 ஆண்டிற்காக அமைச்சு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரியவாறு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |